**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 95/2022** **தேதி: 04.08.2026**

**பி.வா.சா. 1 – சுதாகர்**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதியின் இடம் குறைவாக உள்ளதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து 2 ஏக்கர் 54 செண்ட் குறைவாக உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதிக்கும் அவரது சகோதரர் கார்மேகத்தேவருக்கும் குடும்ப சொத்துக்கள் 5 ஏக்கர் 41 செண்ட்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று முழு விபரமும் எனக்கு தெரியும். பிராது பத்தி 4ல் வாதியின் சொத்துக்கள் பைமாஸ் எண்களாக 256/1–செண்ட் 50, 257–1 ஏக்கர் 45 செண்ட், 259/1–1 ஏக்கர் 52 செண்ட், 260/1– 1 ஏக்கர் 94 செண்ட் மொத்தம் 5 ஏக்கர் 41 செண்ட் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் UDR க்கு முன்பாக யார் பெயரில் இருந்தது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ1ன் படி சுந்தரதேவருக்கு, கருப்பாயியம்மாள் எழுதிக்கொடுத்த பத்திரம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ல் கருப்பாயியம்மாள் என்பவர் கிரையம் பெற்ற முன் பத்திரமான 27.08.1942ம் தேதியிட்ட கிரைய பத்திரம் பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ன் முன் பத்திரம் தான் 27.08.1942 ம் தேதியிட்ட பத்திரம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஆவணத்தில் பிராதில் சொல்லப்பட்டுள்ள பைமாஸ் எண்களான 256–1, 257, 259, 260 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். ஆனால் எங்களுடைய சப் டிவிசனா என்று தெரியாது. மேற்படி 4 பைமாஸ் எண்களை சேர்த்து தான் 5 ஏக்கர் 41 செண்ட் என்றால் அவ்வாறு தான் ஆவணத்தில் உள்ளது. வா.சா.ஆ 1 ன் அடிப்படையில் தான் வாதி உரிமை கோருகிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ 14 ஆவணம் இவ்வழக்கின் 11ம் பிரதிவாதி பவர் ஏஜெண்ட் நிலையில் இருந்து 5ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ 14 ஆவணத்தின் ஆவண எண்.1244/2009 என்றால் சரிதான். பிராதில் சொல்லப்பட்டுள்ள 3, 4 , 6 பிரதிவாதிகள் வரிசையில் தான் தாவா சொத்தில் உரிமை கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 14 ஆவணத்தில் உள்ள 14 ஏர்ஸ் அதாவது தாவா சொத்துக்களில் உள்ள சர்வே எண்.384/2 சொத்துக்களை பொறுத்து 3, 4, 6 பிரதிவாதிகள் உரிமை கோரவில்லை என்றால் சரிதான். ஆனால் மேற்படி சொத்து தாவா சொத்திற்கு வெளியில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வில்லங்கசான்றிதழ் சர்வே எண்.384/1, 72 செண்ட் சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். அது **வா.சா.ஆ 43**. சர்வே எண். 384/1,செண்ட் 72 ஆவண எண். 1244/2009 ஆவணம் செல்லாது என்று சமூக நீதிமன்றம் உத்தரவிட்டதில் அதனை திரும்ப ரத்து செய்வதற்கு வேறு ஒரு வழக்கு மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று எனது எதிர் வழக்குரையிலோ, வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எங்களை தரப்பினராக சேர்க்கவில்லை. மேற்படி விபரம் எனக்கு 2 மாதத்திற்கு முன்பு தான் தெரியும். மேற்படி சங்கதி சம்பந்தமாக எனது தரப்பில் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு யார், யார் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தனுஷ்கொடி என்பவர் 3ம் பிரதிவாதி Raigad கம்பெனி மீது வழக்கு

தாக்கல் செய்துள்ளார். தனுஷ்கொடி என்பவர் தாக்கல் செய்த வழக்கில் நீதிமன்றம் உத்தரவிட்டதை எதிர்த்து ரத்து மனு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இதுவரை தாக்கல் செய்யவில்லை. இதே வாதி மொத்தம் 5 ஏக்கர் 41 செண்டில் அவர் பெயருக்கு தனித்து பட்டா ஏற்பட்ட 35 ஏர்ஸ் சொத்தினை வெங்கடாசலம் என்பவருக்கு விற்பனை செய்த விபரம் எனக்கு தெரியும். வில்லங்கசான்றிதழை பார்த்து தெரிந்து கொண்டேன். அதே போல் அவரது அண்ணன் கார்மேகத்தேவர் 1995 ல் மனோகரன் என்பவருக்கு பவர் கொடுத்து அந்த சொத்தும் 6ம் பிரதிவாதி வாங்கி விட்டார் என்றால் சரிதான். மேற்படி சொத்தின் விஸ்தீரணம் 81 ஏர்ஸ் என்றால் சரிதான். வாதி கொடுத்த 35 ஏர்ஸ் மற்றும் கார்மேகத்தேவர் கொடுத்த 81 ஏர்ஸ் மொத்தம் 5 ஏக்கர் 41 செண்ட் சொத்துக்களை தான் 6ம் பிரதிவாதி கம்பெனி கிரையம் பெற்றுள்ளார். வா.சா.ஆ 43 ஆவணத்தில் தனுஷ்கொடி என்பவர் வழக்கு தாக்கல் செய்ததாக இல்லை என்றும், தனுஷ்கொடியின் மகன் சோலை என்பவர் தான் வழக்கு தாக்கல் செய்ததாக உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கு யார், யார் மீது எதற்காக போட்டார்கள் என்ற விபரம் எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரிதான்.

(வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது. )

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.